இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

முன்-பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழச்சித்திட்டம்

முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை - 2006/2007

ESC 1125/ESC 1136 – கணிதத்திறன் விருத்தி

காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

திகதி: 26.10.2006 நேரம்: மு.ப 10.00 - பி.ப 12.00

எவையேனும் நான்கு(04) வினாக்களுக்கு விடை தருக.

01. (i) முன்பள்ளி பாடசாலை பிள்ளைகளிடம் "ஒன்று-ஒன்றுக்கான தொடர்பு" என்ற கணித எண்ணக்கருவை விருத்தி செய்வதற்கு நீர் திட்டமிடக் கூடிய செயற்பாடுகள் இரண்டை(02) விபரிக்க.
(08 புள்ளிகள்)

(ii) மேலே குறிப்பிட்ட அவ்விரு செயற்பாடுகளுக்கு நீர் பயன்படுத்தும் ஆசிரியர் உபகரணங்களை விளக்கப்படங்களுடன் விளக்குக.
(07 புள்ளிகள்)

(iii) அவ் ஆசிரியர் உபகரணங்களைப் பயன்படுத்தி பிள்ளைகளைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் முறையினைப் படிமுறை படிமுறையாக விளக்குக.
(10 புள்ளிகள்)

02. (i) முன்பள்ளி பாடசாலை பிள்ளைகளிடம் கணித எண்ணக்கருக்களை விருத்தி செய்வதற்கு ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தக்கூடிய பிள்ளை விருப்பங்கள் ஐந்தைக்(05) குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

(ii) நீர் மேலே குறிப்பிட்ட விருப்பங்களுக்கிடையில் யாதேனும் நான்கைத்(04) தெரிவு செய்து முன்பள்ளி பிள்ளைகளிடம் 'வகைப்படுத்தல்' எண்ணக்கருவை விருத்தி செய்வதற்கு, அவற்றினைப் பயன்படுத்தும் முறையினை விளக்குக.
(20 புள்ளிகள்)

03. (i) பிஜாஜே இனால் முன்வைக்கப்பட்டுள்ள அறிகை விருத்திப் பருவங்களை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுக.
(08 புள்ளிகள்)

(ii) நீர் மேலே குறிப்பிட்ட இப் பருவங்களுக்கிடையில் ஏதேனும் இரண்டினைத் தெரிவு செய்து அவைகளின் இயல்புகளைப் பகுப்பாய்வு செய்க.
(17 புள்ளிகள்)

04. (i) பொருட்களுக்கிடையில் இருக்கக்கூடிய பல்வகை தொடர்புடைமைகளான "ஒரே வகுதியைச் சேர்ந்தவை" , "சொந்தவுடைமை" , "ஒப்பிடுதல்" என்பவற்றை முன்பள்ளிப் பிள்ளைகளிடம் விருத்திசெய்வதற்கு பயன்படுத்தக்கூடிய கதை ஒன்றை எழுதுக.

(15 புள்ளிகள்)

(ii) உங்களால் எழுதப்பட்ட கதையினை, முன்வைக்கையில் மேலே குறிப்பிட்ட தொடர்புடைமைகளை உறுதிப்படுத்துவதற்கு, ஆசிரிய உபகரணங்களையும் வினாக்கேட்டலையும் பயன்படுத்தக் கூடிய முறையினைச் சுருக்கமாக விபரிக்க.

(10 புள்ளிகள்)

05. பின்வரும் கணித எண்ணக்கருக்களை விருத்தி செய்வதற்கு பொருத்தமான கற்பித்தல் உபகரணத் தொகுதிகளை (ஒரு எண்ணக்கருவிற்கு ஒன்று வீதம்) விளக்கப்படங்களுடன் விளக்குக.

(அ) வரிசைப்படுத்தல்
(ஆ) சமச்சீர்
(இ) கொள்ளளவு
(ஈ) நிறை
(உ) அண்மை(சமீபம்)

(5 x 5 = 25 புள்ளிகள்)

06. (i) முன்பள்ளி ஆசிரியர் என்ற வகையில் உங்களில் விருத்தி செய்யக்கூடிய விசேட குணவியல்புகள் ஐந்தினை(05) விபரிக்க.

(10 புள்ளிகள்)

(ii) நீர் மேலே முன்வைத்த குணவியல்புகளுக்கிடையில் மூன்றைத்(03) தெரிவு செய்து முன்பள்ளி பிள்ளைகளுடன் செயற்பாடுகளில் ஈடுபடுகையில் இக் குணவியல்புகளை விருத்தி செய்ததால் உங்களுக்கு பிரயோசனப்படும் முறையினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)